கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:26.09.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அமிர்தா விஸ்வ வித்யாபீடத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் அமிர்தா விஸ்வ வித்யாபீடம் ஆகியவற்றுக்கு இடையே 25.09.2023 அன்று, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், உணவு பதன்செய் பொறியியல் துறை மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, அமிர்தா விஸ்வ வித்யாபீட முதன்மை இயக்குநர் (கார்ப்பரேட் மற்றும் தொழில்துறை உறவு) பேராசிரியர் சி.பரமேஸ்வரன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன், வேளாண் பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் மற்றும் உணவு பதன்செய் பொறியியல்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் எம். பாலகிருஷ்ணன் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

உணவு விநியோகச் சங்கிலியில் தர பகுப்பாய்வு - சிக்ஸ் சிக்மாவுக்கான செயல்முறை திறன் பகுப்பாய்வு, வேளாண்மைக்கான பிளாக் செயின் - உணவுத் தடமறிதல், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றல் (ML) ஆகியவற்றைப் பயன்படுத்தி உணவுத் தரச் சரிபார்ப்பு போன்ற துறைகளில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. வெப்ப பரிமாற்ற மாதிரிகள் மேம்பாடு, உணவு மூலம் பரவும் நோய்க்கிருமிகளுக்கான ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் இமேஜிங் மற்றும் பல்வேறு ஆராய்ச்சி வசதிகளை வலுப்படுத்துவதில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**